

# அல்லாவுதீனும் அற்புதவிளக்கும்

முன்னொரு காலத்தில் அல்லாவுதீன் என்ற பெயருடைய இளைஞன் வாழ்ந்து வந்தான். ஒருநாள், ஒரு வழிப்போக்கன் அல்லாவுதீனைச் சந்தித்து, "நான் உன்னுடைய மாமா; நான் நகரத்திற்கு வெளியே ஓர் அதிசயமான இடத்திற்கு உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன்," என்றான். அல்லாவுதீனும் அவனுடன் செல்லச் சம்மதித்தான்.

மறுநாள் அல்லாவுதீனும் உண்மையிலேயே ஒரு மந்திரவாதியான அந்த வழிப் போக்கனும் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். வெகுநேரம் நடந்தபின், அவர்கள் ஒரு குகையின் முன்னே நின்றனர், "அல்லாவுதீன், இந்தக் குகையின் உள்ளே சென்று, அங்கு இருக்கும் பழைய விளக்கை எடுத்துவா," என்று வழிப்-

போக்கன் கூறினான். "உனக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் இந்த மோதிரம் உன்னைக் காப்பாற்றும்," என்றும் கூறினான்.

அவன் குகைக்குள் சென்றதும், அங்கு தங்கம், வைரம் போன்ற எல்லாவிதமான பொருள்களையும் பார்த்தான். அல்லாவுதீன் அவற்றை வேகமாக எடுத்துத் தனது பைகளில் நிரப்பிக் கொண்டான். அவனுக்குத் தன்னுடைய மாமா கேட்ட விளக்கு நினைவிற்கு வந்தது. மூலையில் அந்த விளக்கு இருந்தது. அதை எடுத்துக் கொண்டு படிகளில் ஏறி மேலே வந்தான். அந்த மாயவித்தைக்காரன் அல்லாவு தீனைப்பார்த்து, "அந்த விளக்கைக்கொடு," என்றான்.

அல்லாவுதீன், "மாமா, முதலில் என்னை வெளியே இழுத்துவிடுங்கள்," என்றான்.

அந்த மாயவித்தைக்காரன் கோபங் கொண்டு குகையின் வாயிலை ஒரு பாறையைக் கொண்டு மூடிவிட்டான். அல்லாவுதீன் அங்கு அமர்ந்து அந்த அழுக்கான விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதை இலேசாகத் துடைத்-தான். உடனே அதிலிருந்து வண்ண வண்ணப் புகை மூட்டமும் நெருப்புப் பொறியும் வெளி வந்தன. அந்தப் புகை மெதுவாக ஒரு ராட்சச வடிவமுள்ள மனிதனாக மாறியது.

அந்த ராட்சச வடிவம் பேசியது: "நான் இந்த விளக்கிலுள்ள பூதம். நீ ஏதாவது விரும்பினால், அதன்படி உனக்கு நான் செய்யக் கடமைப் பட்டுள்ளேன்,"என்றது.

"தயவு செய்து என்னை இங்கிருந்து வீட்டிற்கு அழைத்துப்போ," என்று அல்லாவுதீன் கூறினான். சற்று நேரத்திலேயே அல்லாவுதீன் தன் தாயார் முன் இருந்தான்.

மறுபடியும் அல்லாவுதீன் அந்தப் பூதத்திடம் "இந்த வீட்டை அரேபியாவில் உள்ள எல்லா மாளிகைகளையும் விடச் சிறந்ததாக மாற்று," என வேண்டினான். அவனுடைய பழைய வீடு இடிந்து அங்கு ஓர் அற்புதமான அரண்மனை தோன்றியது.

ஒரு நாள் அல்லாவுதீன், சுல்தானின் மகள் மாடியில் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான். அவன் அவள் மீது காதல் கொண்டான். அல்லாவுதீன் தன் தாயார் மூலம் விலையுயர்ந்த கற்களைச் சுல்தானுக்குக் கொடுத்துவிட்டு சுல்தான் மகளை மணக்க அனுமதி கேட்குமாறு கூறினான். சுல்தானும் உடனே ஒப்புக் கொள்ள அல்லாவுதீனுக்கும் அந்த இளவரசிக்கும் உடனடி-யாகத் திருமணம் நடந்தது.

அல்லாவுதீனுடைய வளமான வாழ்க்கையைக் கண்ட அந்தத் தீய மந்திரவாதி, எப்படியாவது அந்த விளக்கைத் திரும்பப் பெற்று

விட வேண்டும் என்று எண்ணினான். அடுத்த நாள் அந்த மாய வித்தைக்காரன் புதிய விளக்குகளை எடுத்துக் கொண்டு அரண் மனையின் முன்பு நின்று கத்தினான், "பழைய விளக்குகளைக் கொடுத்து விட்டுப் புதியன பெறலாம்."

இளவரசிக்கு அல்லாவுதீனிடம் ஒரு பழைய விளக்கு இருப்பது நினைவிற்கு வந்தது. அந்தப் பழைய விளக்கை அவனிடம் கொடுத்தாள். அந்தத் தீய மந்திரவாதி அந்த விளக்கைப் பற்றி அறிந்திருந்ததால் அதை வாங்கித் தேய்க்க, அந்தப் பூதம் வந்தது. "அல்லாவுதீனுடைய மாளிகையை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள மலை மீது கொண்டு வைத்துவிடு," என்று கட்டளை யிட்டான்.

அல்லாவுதீன் திரும்பி வந்து பார்த்தால் அவனுடைய மனைவி, அரண்மனை எல்லாம்

காணவில்லை. அல்லாவுதீனுக்கு உடனடியாக மந்திரவாதி அளித்த மோதிரத்தின் நினைவு வந்தது. அவன் அதை எடுத்துத் தேய்த்தான். இப்பொழுது வேறொரு பூதம் வந்தது, "என்னை என்னுடைய அரண்மனைக்கு எடுத்துச் செல்," என்று அல்லாவுதீன் கட்டளையிட்டான்.

வெகு நேரப் பயணத்திற்குப் பிறகு மலை மீதுள்ள தன் அரண்மனையை அல்லாவுதீன் அடைந்தான். அல்லாவுதீன் மறைந்து மறைந்து அந்த விளக்கு வைத்திருந்த மேசையை அடைந்தான். அந்த மந்திரவாதி உறங்கிக் கொண்டிருந்தான். அல்லாவுதீன் விளக்கை எடுத்துத் தேய்த்தான், அந்தப் பூதம் மறுபடியும் வந்து சொன்னது, "தலைவரே, நான் மறுபடியும் உங்களுக்குச் சேவை செய்வதற்கு மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். உங்கள் விருப்பம் என்ன?" என்றது.

"எனக்குத் தொல்லை கொடுக்கும் இந்த மந்திரவாதியை இந்த எல்லையை விட்டே

விரட்டு," என்று அல்லாவுதீன் கூறினான். ஒரு நிமிடத்தில் அந்தப் பூதம் தன் கை விரல்களைக் கொண்டு ஏதோ சொல்ல அந்த மந்திரவாதி காணாமல் போனான்.

பூதம் அல்லாவுதீனை அரண்மனையுடன் தூக்கிச் சென்று பழைய இடத்தில் வைத்தது. அவனுடன் மீதி காலத்தைக் கழித்தது.

**"புத்தி உள்ளவன் எதையும் வெல்வான்"**